# சாவகச்சேரியில் சுப்பர்சோனிக் தாக்குதல் வயோதிபப் பெண் பலி; எண்மர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் நேற்று சுப்பர் சோனிக் விமானம் குண்டு வீச்சு நடத்தியதில் வயோதிபப பெண் ஒருவர் துடிதுடித்துப் பலியானார் எட்டுபேர் இச் சம்பவத்தில் காயமடைந்தனர். சாவகச்சேரி சந்தை மீது இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது பெட்டிக் கடைகள், வெற்றிலைக் கடை, வாழைப்பழக்கடை மற்றும் பலசரக்குக் கடைகள் என்பன தரைமட்டமாகியதுடன் நவீன சந்தைக் கட்டிடமும் சேதத்துக்குள்ளானது.

நேற்று பி. ப. 2-30 மணியள

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 27 இதழ் 268
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12 — 11 1993

## பெருமளவு மக்கள் இரத்ததானம் செய்தனர்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் காயமடைந்த போராளிகளுக்கு உதவுமுகமாக யாழ் ஆஸ்பத்திரி இரத்தவங்கியில் இரத்த தானம் வழங்க மக்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். பாடசாலை மாணவர்களும், தனியார் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களும், மற்றும் பொதுநிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுமே இதில் அதிகமாக காணப்பட்டனர்.

# பூநகரி தளம் புலிகளிடம் வீழ்ச்சி
# 250க்கும் அதிக படையினர் பலி

## 1500 துருப்பினர் அதிரடியால் தப்பி ஓட்டம்!

[யாழ்ப்பாணம்]

மூன்று இராணுவ முகாம்களையும், ஒரு கடற்படைத்துறையையும் கொண்ட பூநகரி கூட்டுத் தளம் விடுதலைப்புலிகளின் அதிவேக அதிரடித் தாக்குதலுக்கு நேற்று அதிகாலை இலக்காகி புலிகள் வசம் வீழ்ச்சியடைந்தது. இதில் 250க்கும் அதிகமான படையினர் பலியானனர்; இராணுவ மேஜர் ஒருவரும் உயிரிழந்தார்; பல இராணுவ உயர் அதிகாரிகள் படுகாய முற்றனர். 1500 ராணுவத்தினர் தப்பிஓடியதாகவும் தெரிவிக்கப்பட்டது. படையினர் பலருக்கு என்ன நடந்தது என்பதே தெரியவில்லை. பலரைக் காணவில்லை எனவும் அறிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை முதல் பூநகரி மீது நடைபெற்ற விடுதலைப்புலிகளின் துணிகர தாக்குதலில் 250க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும் 100க்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்ததாகவும் கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி, ஏ. எவ். பி. வெரித்தாஸ், வொய்ஸ் ஒவ் அமெரிக்கா, பி. பி. சி உட்பட பல வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் விடுதலைப்புலிகள் பல்வேறு முனைகளிலிருந்தும் படையினரை நோக்கி தாக்குதலை தொடுத்தனர். பலமணி நேரம் நடைபெற்ற உக்கிரமோதலின் பின் நாகதேவன்துறை கடற்படைதளம் விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது.

தொடர்ந்து பூநகரி தளத்தில் பல்வேறு பகுதிகளும் விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. விடுதலைப்புலிகளின் உக்கிர தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் சிதறி ஓடியதாகவும் படையினரை சுற்றி வளைத்து விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதல் நடாத்தி வருவதாகவும் களத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. — க-இ

## 50புலிகள்வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

பூநகரித் தாக்குதலில் 50க்கும் மேற்பட்ட புலிகள் வீரச்சாவடைந்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இதேவேளையில் பூநகரிப் பகுதி முகாம்களிலிருந்துசிதறி

(2-ம் பக்கம் பார்க்க)

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாமின் ஆயுதக்களஞ்சியத்திலிருந்த பல நூறு கோடி ரூபாபெறுமதியான ஆயுதங்களும், வெடிப்பொருட்களும் மற்றும் இராணுவத் தளபாடங்களும் விடுதலைப்புலிகளினால் முற்றாக கைப்பற்றிச் செல்லப்பட்டுவிட்டதென இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக இந்திய வானொலி' தெரிவித்தது.

இதுவரை காலத்தில் விடுதலைப்புலிகள் இவ்வாறானதொரு தாக்குதலை தொடுத்தது கிடையாது என்றும். இதுவே இலங்கை படையினர் ஒரு தாக்குதலில் இழந்த அதிகளவு பெறுமதியான ஆயுதங்களும், இராணுவ தளபாடங்களுமாகும் எனவும் "இந்தியவானொலி' தெரிவித்தது. ஸி-இ)

## நாகதேவன் தளம் சிதைந்தது

(கொழும்பு)

பூநகரி இராணுவத்தளமும் நாகதேவன் கடற்படைத் தளமும் விடுதலைப்புலிகளின் தாக்குதலையடுத்து சிதைந்து காணப்படுகின்றன

நாகதேவன் கடற்படைத் தளம் யாழ் குடாவில் உள்ள ஒரு முக்கிய தளம் மாத்திரமல்ல அது ஒரு பெரிய கடற்படைத்தளமாகவும் உள்ளது.

(2-ம் பக்கம் பார்க்க)

## ஹெலியின் முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

பூநகரி இராணுவ முகாம் பகுதியில் இராணுத் துருப்புகளை ஹெலிகொப்டர் மூலம் தரையிறக்கும் படையினரின் முயற்சி விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலினால் முறியடிக்கப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இதேவேளையில் நேற்று பகல் முழுவதும் அரச படையினரின் பல ஹெலிகொப்டர்கள் பலாலி இராணுவத் தளத்திற்கும் பூநகரிப் பகுதிக்கும் சென்று வந்ததை காணக்கூடியதாக விருந்தது. —க-இ

## யாழ். நகரில் ஷெல்தாக்கு இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பாஷையூர் பகுதியை நோக்கி நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் நடாத்தப்பட்ட கோரஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர் இருவர் காயமடைந்தனர்.

கிருஷாந்த மலர்ராணி (வயது 43. அவரது மகனான ஜேசுராஜன் (வயது 05) ஆகியோரே உயிரிழந்தவராவர்.

மேலும் மலர்ராணியின் சகோதரியான சூசைதாஸ் புஷ்பராணி (46 வயது, அவரது கணவரான தேவசகாயம்

(4-ம் பக்கம் பார்க்க)

## பூநகரிதாக்குஒருதிருப்புமுனை

(கொழும்பு)

பூநகரிப்பகுதியில் படையினர் தற்போது விடுதலைப்புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியுள்ளதாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்கள் தம்மை விடுவித்துக்கொள்வதற்கு தாமே போராடவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப்பகுதிக்கு புதிய படையினரை அனுப்பமுடியாத நிலையில் இராணுவம் தற்போது உள்ளது. பீரங்கி பொருத்திய

(4-ம் பக்கம் பார்க்க)

## நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- வண்ணார் பண்ணை பிரப்பங்குளம் ஒழுங்கையில் நேற்றுக் காலை 11-15 மணிக்கு பொம்பர் விமானத்திலிருந்து ரொக்கட் லோஞ்சர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் நால்வர் காயமடைந்தனர். ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது.

இச் சம்பவத்தின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நவரத்தினம் நவமணி (வயது

(4-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

**நவம்பர் 10 முதல் சனிமாற்ற பலாபலன்கள்**

31-5-95 வரை கும்பராசியில் சனி சஞ்சரிக்கும் விளைவுகள், சனிமாற்றம் ரூபா 10/- பாடசாலை, அலுவலக உபகரணங்கள் விற்பனையாகின்றன. சோபிதா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (இ-590)

**போத்தல்கள் தேவை**

சகல விதமான வெற்று ஹார்லிக்ஸ் போத்தல்களும், வெற்று ஜாம் போத்தல்களும் கொள்வனவு செய்யப்படும். ரேஸ்ட் லைன் இண்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (ஏ-3585)

**COMPUTER கல்வி**

Diploma in Computer Programming — Basic Language. 4 மாத கால பாடநெறி. செவ்வாய், வியாழன் வகுப்புகள். புதிய பிரிவு ஆரம்பம்: 18-11-93 10-30 மணி. கட்டணம் மாதம் ரூ. 400/- மட்டுமே. உறுதியான கல்வியைப் பெற School of Business Administration, 16, 3rd Cross St Jaffna. (C-584)

**வைத்தியம்**

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைசுற்றல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், முதிர்ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம் 181, 8-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-547)


## மாடுகள் திருட்டு: சந்தேக நபர் ஒருவர் காவல்துறையால் கைது

(பருத்தித்துறை)

மாடுகள் அடிக்கடி திருட்டுப் போவதனால் வேலையடைந்த மக்கள் தமிழீழ காவல்துறையில் புகார் செய்ததையடுத்து காவல்துறையினரின் புலன் விசாரணையில் மாடுகளைத் திருடி இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரொருவர் சிக்கிக்கொண்டார்.

தும்பளை, வராத்துப்பளை, புலோலிப் பகுதிகளில் கால்நடை வளர்ப்போர்களின் மாடுகள் திடீர் திடீரென களவாடப்படுவதாக அப்பகுதி மக்கள் பருத்தித்துறை தமிழீழ காவல்துறையிடம் புகார் செய்தனர்.

தமிழீழ காவல்துறையினர் மாடுகளைத் திருடி இறைச்சி விற்பனை செய்த ஒருவரைக் கைது செய்துள்ளனர். —52

## இக்கட்டான நிலையில் 'காமினி' கட்சியினர்

(கொழும்பு)

ஐ. தே. க.வில் திரு. அநுரா சேர்க்கப்பட்டு அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதால் திரு காமினி திஸநாயக்கவும் அவரது ஆதரவாளர்களும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனராம்.

இவரை ஐ. தே. க.வில் சேர்ப்பது குறித்து தற்போது எவருமே அக்கறை காட்டவில்லையாம். ஜனாதிபதியும் இது குறித்து எதுவும் தெரிவிக்காததுடன் அலட்சியப்படுத்தி விட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனால் ஐ தே. க வுடன் சேர்வதா அல்லது திருமதி சிறிமா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதா என்ற தொரு இக்கட்டான நிலையில் உள்ளாராம். (இ)

## நியூஸிலாந்தில் 150 திமிங்கிலங்கள் கரை ஒதுங்கின

(வெலிங்டன்)

நியூஸிலாந்தில் மோசமான காலநிலை காரணமாக கடலிலிருந்து கரை ஒதுங்கிய 150 திமிங்கிலங்கள் மீட்கப்பட்டன. 65 இற்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் இறந்து விட்டன.

கரை ஒதுங்கும் திமிங்கிலங்களில் பெருமளவு ஒரு மீற்றர் நீளமான குட்டிகளாகும். கரை ஒதுங்கிய திமிங்கிலங்களில் 100 வரை நேற்று திருப்பி கடலில் விடப்பட்டன.

மற்றொரு இடத்திலும் கடற்கரையோரம் ஒதுங்கிய பெருமளவு திமிங்கிலங்கள் இறந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## பென்சன் வவுச்சர்

(மானிப்பாய்)

நவம்பர் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலகத்திலிருந்து நேற்றுமுன்தினம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71)

## செஞ்சிலுவை சங்க ஸ்தாபகர் ஞாபகார்த்தவிழா

(சுன்னாகம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் அனுசரணையுடன் வலி-வடக்குப் பிரிவு நடாத்தும் செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகர் யீன் ஹென்றிடுனன் ஞாபகார்த்த விழா ஒருங்கிணைந்த வதிவிடப் பெரும் பாசறையுடன் 1993 மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இம்மாதம் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். கிளைத் தலைவர் த. சிங்கராசா தலைமையில் நடைபெறும். (105)

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் மரணம்

(நெல்லியடி)

ஆடை கடமைக்குச் சென்ற கிணற்றில் தண்ணீர் அள்ளும் வேளை தவறி வீழ்ந்த சிறுவன் பரிதாபமரமாக மரணமானான். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நண்பகல் மட்டுவில் வடக்கு வைரவர் கோவிலடியில் நிகழ்ந்துள்ளது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்வா- பிரபா (06 வயது) என்னும் பாடசாலை மாணவரே மரணமானவராவர். இதுசம்பந்தமான மரண விசாரணை சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றது. -160-சி

## அநாதரவாக மோட்டார் சைக்கிள்

(அச்சுவேலி)

யாழ். நகர் பிரதானவீதியில் (முன்னைய யாழ். மாநகரசபை மன்றம்) முன்பாக கடந்த 8ந் திகதி முதல் உதிரிப்பாகங்கள் கழற்றிய நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று காணப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளை திருடியவர்கள் மக்கள் நடமாட்டமில்லாத இப்பகுதியில் உதிரிப் பாகங்களை கழற்றிவிட்டு அநாதரவாக சைக்கிளை விட்டுச் சென்றிருக்கக் கூடும் என நம்பப்படுகின்றது. (59-இ)


## பிரதிநிதிகள் தேவை

கமிஷன் அடிப்படையில் வர்த்தக ரீதியான அபிவிருத்தி வேலைக்கு பொறுப்புடன் கடமை புரிய எல்லா இடங்களிலும் ஆட்கள் தேவை. சகல விபரங்களுடனும் 15-11-93ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: A 3569
(ஏ- 3569) C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம்.

## பதப்படுத்திய பலாப்பழம்

நன்கு முற்றிப் பழுத்த பலாப் பழச் சுளைகளை சீனிப் பாணியில் பதப்படுத்தப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது. அதே சுவை, அதே மணம். இன்றே வாங்குங்கள்.

**ரேஸ்ட் லைன் இண்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட்,**
**14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**
(ஏ-3584)


## புதிய குடியிருப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினரால் ஜெர்மன் அரசின் உதவியுடன் கன்னாகம் மதிய பகுதியில் நேற்று முன் தினம் புதிய குடியிருப்புத்திட்டம் திறந்து வைக்கப்பட்டது. சுன்னாகம் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்ட இரண்டாவது குடியிருப்புத்திட்டம் இதுவாகும்.

இக்குடியிருப்பினை தமிழர் புனர்வாழ்வுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. ரவி திறந்து வைத்தார். இவ்வீட்டின் குடியிருப்புத் திட்டத்திலுள்ள 14 குடும்பங்களுக்கும் திறப்புகள் வழங்கப்பட்டன.

இக்குடியிருப்பில் இராணுவ நடவடிக்கையால் வலிவடக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ளனர். (இ)

## படையினர்க்கு பேரதிர்ச்சி

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாமும் நாகதேவன் கடற்படை தளமும், விடுதலைப்புலிகளிடம் வீழ்ந்து விட்டதென பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது.

இராணுவத்துக்கும் புலிகளுக்குமிடையில் இன்னும் இப்பகுதிகளில் கடும்சமர் நடைபெற்று வருகிறது இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தாக பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

இத்தாக்குதல் பற்றி பி. பி. ஸி. கருத்துத் தெரிவிக்கையில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரை உள்ளடக்கிய இந்த முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்துவிட்டது. இராணுவத்தினருக்கு பெரும் பாதிப்பைக்கொடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்குமிடையில் இதுவரை நடைபெற்ற மோதல்களில் இதுவே மிகப்பெரிய மோதல் என்றும் கூறப்படுகின்றது.

பூநகரி பகுதி முழுவதும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் இப்பகுதிக்குள் புலிகள் மிகவும் சுதந்திரமாக நடமாடித் திரிவதாகவும் இப்பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகளை மீண்டும் பின்வாங்கச் செய்வது மிகவும் கடினம் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இதே நேரம் பூநகரிப் பகுதியை மீண்டும் மீட்டெடுப்பதற்காக இராணுவம் திட்டமிட்டுள்ளதுடன், அதற்கான ஆலோசனைகளை இராணுவத் தளபதிகள் நடத்தி வருவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்துள்ளது. —வி

## கோயில்கள் பாடசாலைகளில் பொதுமக்கள் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவத்தினர் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் யாழ். நகர் நோக்கி கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதினால் பாஷையூர், குருநகர் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பின் நிமித்தம் தேவாலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

மண்டைதீவிலிருந்து இரா

(4-ம் பக்கம் பார்க்க)

## நாகதேவன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத கடற்படையினர் இந்தத் தளத்தை விட்டு ஓடமெடுத்ததாகவும், கடல் மூலம் தப்பிக்க படகுகளை நோக்கி விரைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் விடுதலைப்புலிகள் இவர்களைத் தடுத்து நிறுத்தி தாக்குதல் நடத்தியதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. —இ

## 50 புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓடிய இராணுவத்தினர் பலர் மறைவிடங்களில் பதுங்கியிருப்பதாகவும் இவர்களைத் தேடிப் பிடிக்கும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் பல சிறிய பிரிவுகளாகப் பிரிந்து தேடுதல் நடாத்தி வருவதாகவும் தெரியவருகிறது.

இராணுவத்தினர் கடல் மார்க்கமாக தப்பிச்செல்வதற்கும் அவர்களைக் காப்பாற்றும் முகமாக கடற்படையினர் இந்தக் கடல் பிராந்தியங்களுக்குள் வர முடியாதபடியும் கடற்புலிகள் பலத்த ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. —வி-இ


## மரத்திலான தளபாடங்கள் வழங்கல்

பின்வரும் மரத் தளபாடங்களை வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. புத்தக ராக்கை (Book shelf) — 15 nos
2. உத்தியோகத்தர் மேசை (Executive Table) — 02 nos
3. கதிரை (Arm Chair) — 02 nos
4. அட்டைக் கோவைப் பெட்டி (Card Catalogue Cabinet) — 04 nos
5. கண்ணாடி அலுமாரி (Glass fronted - Almyrah) — 03 nos

இவற்றிற்கான வரை படங்களையும் மற்றும் விபரங்களையும் 16-11-1993ற்கும் 19-11-1993இற்கும் இடையில் அலுவலக நேரத்தில் யாழ். பல்கலைக்கழக நிதியாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இவற்றைப் பெற விரும்புவோர் ரூபா 250/- இனை மீளளிக்காத வைப்புப் பணமாகவும் ரூபா 3,000/- இனை மீளளிக்கத்தக்க வைப்புப்பணமாகவும் யாழ். பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 25-11-93 காலை 10-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் 10-30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத்திர உறையின் இடதுபக்க மூலையில் "மரத்தளபாட கேள்விப்பத்திர விண்ணப்பம்" என குறிப்பிடப்படல் வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். பதிவாளர்
(ஏ-3586)

**மணிவாக்கு**

தனைக்குறைவோர்க்கும் அஞ்சுவோர்க்கும் எதுவும் அசாத்தியமாகும்.
— சர்வால்டர்ஸ்காட்

# மேலதிகமாக 1,100 டாக்டர்கள் ஒவ்வொரு வருடமும் தேவை

(கொழும்பு)

இலங்கைக்கு ஒவ்வொரு ஆண்டும் மேலதிகமாக 1,100 டாக்டர்கள் தேவைப்படுகின்றார்கள். எனவே இதன் அடிப்படையில் வைத்திய பீடங்களில் அனுமதிக்கப்படும் மாணவர் தொகையும் அதிகரிக்கப்பட வேண்டும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் அருச்சுனா அலுவிகார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் வைத்திய கூடங்கள் நாட்டின் தேவைக்கேற்ப டாக்டர்களை உருவாக்குவதில்லை.

பல்கலைக்கழகங்களில் உள்ள வைத்திய பீடங்கள் போதனா வைத்திய சாலைகள் ஆகியவற்றின் உள்ள வசதிகளை உரிய முறையில் பயன்படுத்தி நாட்டில், அதிகரித்துவரும் டாக்டர்களின் தேவைக்கேற்ப புதிய டாக்டர்களை உருவாக்க பல்கலைக்கழக துணைவேந்தர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை எனவும் குற்றம் சாட்டியுள்ளார். —சி

# நமது நோக்கு

## வரவு செலவுத் திட்டம்

இராணுவ ஆக்கிரமிப்பும், பொருளாதாரத் தடைகளும் இங்கு இருக்கும்வரை தென்னிலங்கை வரவு செலவுத் திட்டம் பற்றி நாம் அதிகம் அக்கறை கொள்ளத் தேவையில்லை.

நமது பகுதி உரிமை பெற்று, நமது வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த என்னென்ன செய்ய வேண்டும் என்பதிலேயே கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எனினும், மறைமுகமாக வரவு செலவுத் திட்டத்தின் தாக்கம் ஓரளவு எமது பகுதிப் பொருளாதாரத்தையும் பாதிக்கும்.

"இங்கு நடக்கும் போர் ஓர் அர்த்தமற்ற போர். பொருளாதாரம் வளர்ச்சி அடைய வேண்டுமானால் இதற்கு ஓர் தீர்வு காணப்பட வேண்டும்!" என அமைச்சர் ஹேரத் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துப்பேசும் போது குறிப்பிட்டார்.

சென்ற சில வருடங்களாக இது திருப்பித் திருப்பிக் கூறும் தாரக மந்திரமாகும்.

சொல்வதொன்று, செய்வது வேறொன்று என்பதுதான் அரசு கடைப்பிடிக்கும் வழி

பாதுகாப்புச் செலவு அதிகரித்ததன் அர்த்தம் என்ன? போர்ச் செலவின் ஒரு பகுதியை ஈடுசெய்வதாகும் என்பதே அரசின் நோக்கம்.

இதேவேளை, அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டு என்பதையும் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சில சலுகைகளிலிருந்து தெரிகிறது.

ஆனால், திறந்த பொருளாதார அமைப்பில், வரிகளை அரசு நிர்ணயிக்கும் போக்குக் குறைவதால், நன்மை பெறப் போகிறவர்கள் யார்? வணிகர்களா, அல்லது மக்களா?

ஏற்கெனவே 83 அரச நிறுவனங்கள் மக்கள் மயமாக்கப்பட்டுள்ளன. அதாவது தனியார் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு மேலும் 37 அரச நிறுவனங்கள் தனியார் மயமாகப் போகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக நிதி நிறுவனங்களின் கட்டளைகளை அரசு சிரமேற் கொண்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆனால் இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையுமா? வாழ்க்கைச் செலவு குறையுமா?

தேர்தலுக்கு முன் வடகிழக்குப் பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற ஜனாதிபதி அறிவிப்பும் வரவு செலவுத் திட்ட உரையோடு வெளிவந்துள்ளது. வெறும் தேர்தல் பேச்சாகி விடாது என நம்புகிறோம்!

# இலங்கை கடற்படையிடமிருந்து தமிழக மீனவரை காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை

(சென்னை)

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படாமல் தடுப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுத்துள்ளது என்று இந்திய பிரதமர் பி.வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்தி தக்க பாதுகாப்பு அளிக்கக் கோரிப் பிரதமருக்குக் கடிதம் எழுதிய தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியத்திற்கு பிரதமர் பதில் எழுதியுள்ளார்.

தமிழக மீனவர்கள் பிரச்னை குறித்து மத்திய அரசு தீவிரமாக உள்ளது என்றும், இலங்கை அரசின் உயர்மட்ட அளவில் இந்தப் பிரச்சினையைப் பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் தமது பதிலில் குறிப்பிட்டுள்ளார். —கே சி

# கசிப்பு விற்ற அறுவருக்கு ரூ.ஒன்றரை லட்சம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட அறுவருக்குத் தமிழீழ யாழ் மாவட்ட நீதிமன்றில் 1,59,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிவான்கள் மயூரன், சுடர், இசையமுதன் ஆகியோர் இந்த அபராதத்தை விதித்தனர்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர் 16 போத்தல் கசிப்பு சட்டவிரோதமாக வைத்திருந்தாரென குற்றஞ் சாட்டப்பட்டிருந்த வழக்கில் எதிர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தமிழீழ சட்டக் கோவைக்கு அமைவாக 50,000 ரூபா அபராதம் செலுத்துமாறும் தண்டம் செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டு வருடங்கள் கட்டாய சமூகசேவையில் ஈடுபட வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதேபோன்று கோண்டாவிலைச் சேர்ந்த ஒருவர் ஐந்து போத்தல் கசிப்பு வைத்திருந்ததை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து எதிர் 30,000 ரூபா அபராதம் செலுத்த வேண்டுமென்றும் அபராதம் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒன்றரைவருட கட்டாயசமூக சேவையில் ஈடுபட வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

மேலும் கோண்டாவிலைச் சேர்ந்த ஒருவர் 8 போத்தல் கசிப்பு வைத்திருந்ததாகவும் அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவர் 5 போத்தல் கசிப்பு வைத்திருந்ததாகவும் உரும்பராயைச் சேர்ந்த ஒருவர் ஒரு போத்தல் கசிப்பு வைத்திருந்ததற்காகவும் கோண்டாவிலைச் சேர்ந்த ஒருவர் ஆறு" றம்" கசிப்பு வைத்திருந்ததாகவும், தலா 35,000 ரூபா, 25,000 ரூபா, 15,000 ரூபா. 4,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதம் செலுத்தத்தவறும் பட்சத்தில் தலா ஒரு வருடம் ஏழு மாதம், ஒருவருடம், ஒரு வருடம், ஐந்து மாதங்கள் கட்டாய சமூக சேவையில் ஈடுபடவேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. (162-சி)

## இராசிபலன்

12-11-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 27)

திரயோதசி மு. ப. 8-27 வரை; சித்திரை பி. ப. 4-41 வரை, சித்தயோகம், இராகு காலம் காலை 10-36 முதல் 12-06 வரை சுபநேரம் காலை 6-06 முதல் 7-36 வரை.

மேஷம், தொழில் லாபம், புதிய உறவு, களிப்பு.

இடபம்; அஜாக் கிரதை, காரியதடை, அவசரபுத்தி

மிதுனம்! உடல் சுகம், குடும்பமகிழ்ச்சி கலந்துரையாடல்.

கடகம்! பந்துக்களுடன் விரோதம், கட்டுப்படாத அலைச்சல்.

சிம்மம்! தனலாபம் தொழில்சேர்த்தி, நன்மதிப்பு.

கன்னி! முயற்சி வீணாகுதல், பிறர்க்கு உதவுதல், மனவேதனை.

துலாம்: பயணசிரமம், பணமுடை, தர்மசிந்தனை.

விருச்சிகம்: சுபகாரிய செலவு, உறவினர் நன்மை, முமைன் கூறல்.

தனுசு: காரியசித்தி, தொழில் முன்றம், குடும்ப கௌரவம்.

மகரம்: வியாதி, சோகம், தொழில் பாதிப்பு.

கும்பம்: வீண்பழி, மனநிலைபாதிப்பு, கடும் சினம்.

மீனம்; பிரியமானவர்களுடன் விருந்து, குடும்பநன்மை உல்லாச வாழ்வு.

— ஜோஸ்யர்.

# அணுத்திட்டத்தை பாக். கைவிடாது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது அணுத் திட்டத்தை சற்று கட்டுப்படுத்துமே தவிர, அணுத்திட்டத்தை முற்றிலும் ரத்துச் செய்துவிடும் எண்ணம் எதுவும் பாகிஸ்தானிடம் இல்லை இல்லையென பிரதமர் பெனாசிர் பூட்டோ கூறியுள்ளார்.

சர்வதேச அழுத்தத்திற்கு பயந்து, நவாஸ் ஷெரீப்பின் அரசு அணுத்திட்டத்தை நிறுத்தி வைத்திருந்ததாக அவர் குற்றஞ்சாட்டினார்.

பாகிஸ்தான் தனது அணு ஆயுத திட்டத்தை நிறுத்திக் கொள்ளுமாறு வலியுறுத்த பாகிஸ்தான் வந்திருந்த அமெரிக்க வெளியுறவுத் துறையின் மூத்த அதிகாரி ரஷெலினை சந்தித்து பேசிய பின்னர் பெனாசிர் பூட்டோ இக்கருத்தை வெளியிட்டார். (கே-சி)

## ராஜீவ் கொலை விசாரணை

# கருணாநிதியின் சார்பில் வழக்கறிஞர் ஆஜராவார்

(சென்னை)

ராஜீவ் காந்தி படுகொலைச் சதித்திட்டம் பற்றி விசாரித்து வரும் ஜெயின் கமிஷன் முன் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியின் சார்பில் அவரது வழக்கறிஞர் இம்மாதம் 16-ம் திகதி ஆஜராவார்.

கோவைபுத்தூரில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் திரு. கருணாநிதி மேற்குறிப்பிட்ட தகவலைத் தெரிவித்தார்.

இக்கமிஷன் முன் வை. கோபாலசாமி, வி. பி. சிங் ஆகியோரும் சாட்சியமளிக்க ஆஜராக வேண்டுமென அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. —சி

# அமரர் வீரசிங்கம் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் நினைவு நாள் டிசம்பர் 5 ம் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நினைவு நாளை அனுஷ்டிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினர் மேற்கொண்டுவருகின்றனர். —162

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு 'சான்றிதழ் வழங்கலும் ஆவண வெளியீடும்' நிகழ்ச்சி கல்லூரி அதிபர் எஸ். கீதபொன்கலன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக டாக்டர் செ. நச்சினார்க்கினியன் கலந்து கொள்வார். இதன்போது முன்னாள் மாணவர் அவைத் தலைவர் சி. சிவகரன் தற்போதைய மாணவர் அவைத் தலைவர் நி ஜனகன் ஆகியோர் உரையாற்றுவர் —சி

0 0 0

(அச்சுவேலி)

அமைதியும் சமாதானமும் சுபீட்சமும் நிலவ வேண்டி வண்ணை ஐயனார் கோவிலடி ஸ்ரீ விசுவேச விநாயகருக்கு இன்று 12-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு விசேட சங்காபிஷேகம் ஒன்று நடைபெறவுள்ளது. —59

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். கைதடி தினம் மத்திய மகா வித்தியாலய விஞ்ஞான மன்றத்தினர் இன்று 12ம் திகதி வெள்ளிக்கிழமை விஞ்ஞான தினம் கொண்டாடுகின்றனர். இன்றைய தினம் வருடாந்த வெளியீடான "அறிவியல்கதிர்" விஞ்ஞான சஞ்சிகை வெளியிடப்படும். திருமதி கோகிலா மகேந்திரன் மலரை ஆய்வு செய்யவுள்ளார்.

யாழ் மாவட்ட அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. அ பஞ்சலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

0 0 0

(வேலணை)

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 12-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியளவில் யாழ். கோணந்தோட்டத்தில் இருக்கும் சங்கத்தின் தலைமைக் காரியாலத்தில் நடைபெற இருக்கிறது. —75

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்து சமய அபிவிருத்திச் சங்க ஆதரவில் இன்று 12-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7-45 மணியளவில் ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாசாலையில் அமைந்துள்ள ஞான வைரவர் கோவிலில் சைவ சமய தீட்சை வைபவம் நடைபெறும்.

0 0 0

(கொழும்புத்துறை)

தொல்புரம் ஸ்ரீ ஆதிமுத்து மாரியம்பாள் ஆலயத்தில் ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமையான இன்று 12ம் திகதி 3வது நாளாக நாட்டில் அமைதி, சமாதானம், சுபீட்சம் நிலவ இறைஆசி வேண்டி காலை 8 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை ஆராதனைகள் இடம்பெறும். பின் அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். மாலை 6 மணிக்கு நாடு நலம்பெற விசேடபூசையும், பஜனை வழிபாடும் 108 தீபவிளக்கு ஏற்றலும் நடைபெறும். -154

0 0 0

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் கிறிஸ்மஸ் ஒளி விழா இன்று 12 ம் திகதி வெள்ளிக்கிழமையன்று நடைபெறவுள்ளது. (72)

**காடு வளர்க்க கைகொடுத்தல்**
**இந் நாட்டு சூடு தணிக்கும் செயல்**

# தி. மு. க. விலிருந்து வை. கோபாலசாமி நீக்கம்

(சென்னை)

தி. மு. கவிலிருந்து திரு. வை. கோபாலசாமி நீக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் திரு. அன்பழகன் நேற்று தெரிவித்தார்.

இதுதொடர்பாக திரு. அன்பழகன் திரு. வை கோபாலசாமிக்கு அனுப்பிய கடிதத்தில் கட்சியின் தேர்தல் பணி செயலாளர் பதவியிலிருந்தும் சாதாரண உறுப்பினர் பதவியிலிருந்தும் திரு வை. கோபாலசாமி நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கட்சியின் கட்டுப்பாடுகளுக்கும், சட்ட திட்டத்திற்கும் அமைவாக திரு. வை. கோபாலசாமி நடந்து கொள்ளாததாலேயே இவர் நீக்கப்பட்டுள்ளதாக மேலும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. வை. கோபாலசாமிக்கும், கட்சித் தலைவர் மு. கருணாநிதிக்கும் இடையில் சமீபகாலமாகவே முறுகல் நிலை இருந்துவந்தது தெரிந்ததே. —ஈ-இ

## ஐந்து வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரப்பங்குளம் ஒழுங்கையில் குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்று மேற்கொண்ட ரொக்கட் தாக்குதலில் ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. அத்துடன் அந்தப்பகுதியில் பல மரங்களும் முறிந்து வீழ்ந்தன. -162 இ

## பீரங்கித் தாக்குதல்

(அரியாலை)

பூநகரி தாக்குதலைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் நள்ளிரவுக்குப்பின் தொடர்ச்சியாக கல்முனை பூநகரி கடற்பகுதியிலிருந்து பீரங்கித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அரியாலை, பூம்புகார், மணியம்தோட்டம், மறவன்புலோ, பாசையூர் பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மறவன்புலோ பகுதியில் இலருக்கு காயமேற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (59 இ)

**யாழ். நகரில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குசைதாஸ் (வயது 48) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். க-இ

**கோயில்கள்**

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் குண்டுகள் பாஷையூர், குருநகர், கொய்யாத்தோட்டம், அரியாலை, பூம்புகார் ஆகிய இடங்களில் விழுந்து வெடித்தன.

கொய்யாத்தோட்டம் கரையோரப் பகுதியில்ஷெல் விழுந்ததில் மூவர் படுகாயமடைந்னர்.

இதேநேரம் நேற்று இரவும் மண்டைதீவு பகுதியிலிருந்து இராணுவத்தினர் கொட்டடி பண்ணை, நாவாந்துறை பகுதிகளை நோக்கி ஷெல் குண்டுகளை அடிக்கடி ஏவியதினால் பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்திலுனும் இரவு முழுவதையும் கழித்தார்கள். வி-இ

## குழாய்க்கிணறு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொது நூலகத்துக்கென 20,000 ரூபா செலவில் குழாய்க்கிணறு ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது. -162

**சாவகச்சேரி**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளவில் பலாலி இராணுவ முகாம் பகுதியிலிருந்து தென்மராட்சிப் பகுதி நோக்கிவந்த இரண்டு சுப்பசொனிக் குண்டு வீச்சு விமானங்கள் பொதுமக்கள் கூடும் சந்தைக் கட்டடம் மீது இருதடவைகளில் நான்கு குண்டுகளை மாறி மாறி வீசின.

இக்குண்டு வீச்சின்போது வாழைப்பழ வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த மீசாலையைச் சேர்ந்த குலசேகர தெய்வானைப் பிள்ளை (64 வயது) ஸ்தலத்திலே துடிதுடித்துப் பலியானார்!

புத்தூரைச் சேர்ந்த எஸ். தியாகராசா (38 வயது), வவெட்டித்துறையைச் சேர்ந்த எஸ் ஸ்ரீநிவாசன் (வயது 18) சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ். விமலேஸ்வரன், தனங்கிளப்பைச் சேர்ந்த ரதீஸ்குமார் (02 வயது), அல்லாரை மீசாலையைச் சேர்ந்த எஸ். குணாநிதம் (23 வயது) எஸ் தேவதுரை (28 வயது), வசாவிளானிலிருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது சாவகச்சேரியில் வசிப்பவரும் பொன்னு (75 வயது), சாவகச்சேரியைச் சேர்ந்த யோகராசா (30 வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் சாவகச்சேரி அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தில் மற்றொரு பெண் பலியானதாகவும் எனினும் அது ஊர்ஜிதம் செய்யப்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. -155-இ

**பொம்மர்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

48] அவர் மகள் ந. சந்திரவதனி (வயது 21) சி. சிவபாக்கியம் (வயது 78) கே. வள்ளிநாயகி (வயது 56) ஆகியோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நவரத்தினம் என்பவருடைய வீடே முற்றாகச் சேதமடைந்துள்ளது. —162-இ


## கணனி, இலத்திரனியல் கண்காட்சி

மேற்படி கண்காட்சி மறு அறிவித்தல் வரை

**ஒத்திவைக்கப்பட்டுள்ளது**

என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

(கி-595)


## பூநகரித்தாக்கு ஒரு திருப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிகொப்டர்கள்கூட இந்தப்பகுதிக்கு போகமுடியாத ஒருநிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் விடுதலைப் புலிகள் இந்தப்பகுதியைச்சுற்றி உறுதியான வியூகம் ஒன்றை அமைத்துள்ளனர். விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு ஹெலிகொப்டர்களும் இங்கு இலக்காகின்றன. விமானத்தாக்குதல்களையும் இங்கு மேற்கொள்ளமுடியாதுள்ளது. ஏனெனில் படையினர் அத்தாக்குதலுக்கு இலக்காகும் பகுதிக்குள் பிடிபட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் இப்போது ஒரு திருப்புமுனையையே ஏற்படுத்தியுள்ளது ஏனெனில் இராணுவம் இப்போது அதன் பலத்தையே மீளாய்வுசெய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அரசியல் வாதிகள்கூட வட கிழக்கு பிரச்சினை தொடர்பான தமது நிலைப்பாட்டினை மீளாய்வு செய்து பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தவேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. -இ

# பலமணிநேரத்தின் பின்பே அரசு கண்விழித்தது

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாமையும் நாகதேவன் கடற்படைத் தளத்தையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றி விட்டதாக, பாதுகாப்பு வட்டாரங்கள் 9 மணித்தியாலங்களின் பின்னரே ஒப்புக்கொண்டதாக 'வெரித்தாஸ்' வானொலி நேற்று அறிவித்தது.

பூநகரி இராணுவ முகாமையும் நாகதேவன் கடற்படைத் தளத்தையும் விடுதலைப்புலிகள் ஒரே நேரத்தில் தாக்கினார்கள். இத்தாக்குதலில் நாகதேவன் கடற்படைத் தளத்தில் இருந்த படையினர் அனைவரும் பலியாகிவிட்டதாகவும் இத்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஐந்து விசைப்படகுகளையும் பல நவீன ரக ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இத்தாக்குதலில்தான் விடுதலைப்புலிகள் மிகக்கூடுதலான ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளார்கள். இவற்றில் டாங்கிகள், கவசவாகனங்கள், 50 கலிபர் துப்பாக்கிகள், விசைப்படகுகள், 5 கிலோ மீட்டர் சென்று குறித்த இலக்கைத் தாக்கும் 120 மில்லி மீட்டர் துப்பாக்கிகள், 6 என்பன முக்கியமானதாகும்.

இந்த ஆயுதங்களை வருங்காலத்தில் விடுதலைப்புலிகள் இராணுவத்துக்கு எதிராக பாவிக்கக்கூடும் என்று வெரித்தாஸ் கருத்து தெரிவித்தது. —வி-இ

# தென்மராட்சி அதிர்ந்தது

(சாவகச்சேரி)

நேற்று அதிகாலை ஒருமணி தொடக்கம் தென்மராட்சி தொடர்ந்து அதிர்ந்த வண்ணமுள்ளது. பேசா வெடிக் பொழுது கடல் பீரங்கிகளும், ஷெல்களும் தென்மராட்சிக் கரையோரப் பகுதி மக்களையும், பளை பகுதி மக்களையும் இடம் பெயரவைத்தது. ஆரம்பத்தில் கடல் பீரங்கித் தாக்குதல், ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து போர் விமானங்களின் மூர்க்கத்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல் ஆரம்பமானது. விமானப் படையின் விமானங்கள் பளை, தென்மராட்சி கரையோரப் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமான தொடர்ச்சியான தாக்குதலில் ஈடுபட்டன. [155-இ

# புலிகள் வலிமையானவர்கள்

கடந்த சில மாதங்களாக விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை நாம் படிப்படியாக நசுக்கி வருவதாக இராணுவம் கூறிவந்தது. ஆனால் நாம் ஒய்ந்துவிட்ட படையல்ல இன்றும் இராணுவத்தின் இதயம் போன்ற இடங்களையும் அடித்து நொருக்கும் வல்லமையுள்ள படையாகவே நாம் இருந்து வருகின்றோம்.

பூநகரியை அரசு தற்போது இழந்த நிலையில் இலங்கை அரசின் கொள்கைகள் தற்போது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்றது இதேவேளை அடுத்த வருடம் ஜனவரி மாதம் தேர்தல்களை நடாத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இத்தேர்தலுக்கும் அரசு தக்க பாதுகாப்பு அளிப்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்றது தேர்தலை நடாத்தி அதன் மூலம் தனது அரசியல் திட்டங்களை செயல்படுத்தினால் விடுதலைப்புலிகளை மக்களிடமிருந்து ஒதுக்கிவிடலாம் என்ற அரசின் நம்பிக்கையும் தற்போது தவிடுபொடியாகிவிட்டது.என்று பி. பி ஸி மேலும் தெரிவித்தது. - வி-இ

# மிக மோசமான தாக்குதல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதியில் கடந்த 21 ஆண்டுகளில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மிக மோசமான தாக்குதல் இதுவென இராணுவ சிரேஷ்ட பேச்சாளர் பிரிகேடியர் நளின் செனவிரத்ன நேற்று வர்ணித்தார் அவர்மேலும் தெரிவிக்கையில்: பீரங்கிகள் உட்பட அனைத்து தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் இத்தாக்குதலின்போது அபகரித்து கடற்படைப்பிரிவை முற்றாக நாசமாக்கியுமுள்ளனர். இவ் இரு தாக்குதலும் ஒரே சமயத்தில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும் நேற்றுமுன்தினம் அதிகாலை ஒருமணிக்கு ஆரம்பமாகிய இத்தாக்குதல் சுமார் 7 மணிநேரம் வரை நீடித்தது என்றார். (ஈ இ)

# கேந்திர தளம் வீழ்ந்தது

(லண்டன்)

கடந்த 10 வருடங்களாக அரச படையின —விடுதலைப்புலிகளுடனான மோதலில் சந்தித்த மிகப்பெரிய பின்னடைவு பூநகரி தாக்குதல் என பி பி. ஸி நேற்று தெரிவித்தது. இதுதொடர்பாக பி. பி ஸியின் கொழும்பு செய்தியாளர் கிரகாநேரக தெரிவிக்கையில், வடக்கு—கிழக்கு யுத்தத்தில் தமது கை ஓங்கியிருப்பதாக இலங்கை இராணுவத்தினர் உரிமை பாராட்டி வருகின்ற சந்தர்ப்பத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ கடற்படைத்தளம் விடுதலைப்புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டது என்றார். இத்தாக்குதலில் 250க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாக அவுஸ்திரேலிய வானொலி நேற்று தெரிவித்தது. மேலும் நாகதேவன்துறையில் 600 படையினர் உள்ளதாகவும் விடுதலைப்புலிகளிடம் இம்முகாம் வீழ்ந்ததாகவும் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக வொய்ஸ் ஒவ் அமெரிக்கா தெரிவித்தது. —ஈ-இ

# 5 விசைப்படகுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட கெறில்லாத் தாக்குதலில் ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சொந்தமான ஒரு நீருந்து விசைப்படகு விடுதலைப்புலிகளால் முற்றாக தகர்க்கப்பட்டது. மேலும் 5 நீருந்து விசைப்படகுகளும் பெருமளவு ஆயுதங்களும் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டன. இரு டாங்கிகள், இராணுவ கவச வாகனங்கள், 50 கலிபர் இயந்திர துப்பாக்கிகள், வெடிபொருட்கள் உட்பட பெருமளவு இராணுவ தளபாடங்கள் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

பள்ளிக்குடா நாகதேவன் துறையில் படையினரின் தொடர்காவலரண்களும் மினி இராணுவ முகாம்களும் படையினரால் அமைக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட நீருந்து விசைப்படகுகள் 13½ மீற்றர் நீளமானதும், 250 குதிரை வலுக்கொண்ட இரு இயந்திரங்கள் பூட்டப்பட்டவை எனவும் ஒரு அடி ஆழத்திலும் இப்படகுகள்செல்லக்கூடியவை என்றும் அறியவருகிறது. -க-இ

# பூநகரிக்கு நேற்று முதலிடம்

(யாழ்ப்பாணம்)

பூநகரித் தாக்குதலுக்கு உள்ளூர், வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்கள் அனைத்தும் நேற்று முக்கியத்துவம் கொடுத்தன. பி. பி. சி. வொய்ஸ் ஒவ் அமெரிக்கா, வெரித்தாஸ், அவுஸ்திரேலிய வானொலி, ஏ. எவ். பி. ராய்ட்டர், அகில இந்திய வானொலி, இலங்கை வானொலி, ரூபவாஹினி மற்றும் ஐ. டி. என். உட்பட பல்வேறு செய்தி அமைப்புகள் அதன் தலைப்புச்செய்தியாக பூநகரித் தாக்குதலை விபரித்தன. க-இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ் தோரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B